[19th November 1963

இப்போது நடந்து வருகின்றன. 1964-ம் ஆண்டு இறுதிக்குள் மேற்படி தொழிற்பேட்டை செயல்படத் துவங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சுற்றுலா விடுதிகள்

*279 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழ் நாட்டில் எங்கெங்கு Tourist Home- கள் கட்டப் பட்டுள்ளன ?

(இ) மேலும் எங்கெங்கு கட்ட உத்தேசம்?

(உ) இவைகள் எந்த அடிப்படையில் கட்டப்படுகின்றன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஏற்கனவே மத்திய அரசாங்கத்தனகீழ் மகாபலிபுரத்தில் உள்ள சுற்றுலா மாளிகை யைத் தவிர, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் மத்திய அரசாங்கததாலும், குற்றாலம், நாகர்கோவில், மதுரை, திருசசிராப்பள்ளி, உதகமண்டலம ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசாங்கத்தாலும் சுற்றுலா மாளிகைகள் கட்டப் பட்டுள்ளன.

(இ) மகாபலிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, குற்றாலம் ஆகிய இடங்களில் கூடுதலாக ஒவ்வொரு சுற்றுலா மாளிகையும், கொடைக்கானல், காஞ்சிபுரம், ராமேஸ்வரம், ஒக்கேனக்கல், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, சுருளி ஆகிய இடங்களில் புததாக ஒவ்வொரு சுற்றுலா மாளிகையும் கட்ட உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

(உ) வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பிரயாணிகள் மற்றும் யாத்ரீகர்களுடைய எண்ணிக்கை, அவர்களுடைய தேவைகள், ஏற்கனவே உள்ள வசதிகள் முதலியவற்றைக் கருத்திற்கொண்டு அவர்களைக் கவரும் இடங்களில் சுற்றுலா மாளிகைகள் கட்டப்படுகின்றன.

திரு. சா. கணேசன் : காரைக்குடி ஒரு முக்கியமான பகுதியாக இருப்பதினாலும் பல்வகை கல்லூரிகள், ஆராய்ச்சிக்கூடம் முதலியன விளங்குவதனாலும் பல ஆண்டுகளாக அங்கே சுற்றுலா மாளிகை அமைக்கப்படவேண்டுமென்ற விண்ணப்பம் வந்து கொண்டிருப்பதனாலும், அங்கே ஒரு சுற்றுலா மாளிகையை அரசாங்கம் கட்டித் தருமா ? கட்டித்தரும் என்றால் எப்போது செயல்படத் தொடங்கும்.

கனம் திரு. கோ. பூவராகன் : அதுபற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. முனு ஆதி : பெருவாரியாக நம் நாட்டில் ஏழை மக்களே அதிகமாக இருப்பதனால் இந்தச் சுற்றுலா மாளிகையில் அவர்கள் தங்க முடியாது போகிறது. காரணம் வாடகை அதிகமாக

19th November 1963]

இருப்பதுதான். ஆகவே வாடகைக் கட்டணத்தைக் குறைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : கனம் அங்கத்தினர் இந்தச் சுற்றுலா மாளிகைக்குச் சென்று தங்கியிருக்கமாட்டார் என்று நினைக்கிறேன். காரணம் இங்கெல்லாம் மிகக் குறைந்த கட்டணம் தான் வசூலிக்கப்படுகிறது. கட்டணம் அதிகமாக உள்ளது என்று இதுவரை எந்தத் தரப்பில் இருந்தும் புகார் அரசாங்கத்திற்கு வரவில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களின் தலை நகரத்திலும் சுற்றுலா மாளிகைகள் இருக்கவேண்டியதன் அவசியத்தை சர்க்கார் உணர்ந்து தலைநகரம்தோறும் ஏற்படுத்த திட்டம் வகுப்பார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : எங்கெங்கே கட்டவேண்டுமோ அங்கெல்லாம் கட்டி வருகிறோம். எத்தகைய இடங்களில் கட்டப் பட்டு வருகிறது என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அதில் சம்பந்தப்பட்டதாக இருந்தால் கவனிக்கப்படும்.

செயற்கை வைரத் தொழிலாளர்

*** 280 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போது வேலையிழந்துள்ள செயற்கை வைரத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புக்கள் கோரி விண்ணப்பித் துள்ளனரா ?

(இ) எத்தனை (1) ஸ்தாபனங்கள் (2) தனியார்கள் விண்ணப் பித்துள்ளனர் ?

(உ) சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம். வேலையிழந்துள்ள செயற்கை வைரத் தொழிலாளர்கள் பலர் வேலை வாய்ப்புகள் கோரி எம்ப்ளாய்மெண்ட் ஆபீசில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

(இ) ஐந்து ஸ்தாபனங்கள் வேலை வாய்ப்பு கோரி எம்ப்ளாய் மெண்ட் ஆபீசுக்கு எழுதியுள்ளன. 1,366 தொழிலாளர் எம்ப்ளாய் மெண்ட் ஆபீசில் தங்கள் பெயரைப் பதிவு செய்திருக்கிறார்கள்.

(உ) எம்ப்ளாய்மெண்ட் ஆபீசு 91 பேரை வேலைக்குச் சிபாரிசு செய்தது. ஆனால், ஒருவருக்கு மட்டும்தான் வேலை கிடைத்தது.

திரு. க. ர. நல்லசிவம் : செயற்கை வைரத் தொழிலாளர்களுக் கென திருச்சி, கோவை ஜில்லாக்களில் செயற்கை வைரத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு இருக்கின்றன. குறைந்தபட்சம் அதை மீண்டும் நடத்த சர்க்கார் ஏதாவது உதவி செய்ய முடியுமா ?